செய்தி வெளியீடு எண்.430 நாள்:27.5.2010

# மின்னணு முத்திரை பதிப்பு (e-stamping) திட்டத்தினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

பதிவுத்துறையில் கணினிமயமாக்கல் திட்டமான **"ஸ்டார்"** திட்டம் **6.2.2000** அன்று தமிழகத்தில் தொடங்கப்பட்டு, **574** சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு உள்ளது. தற்போது பதிவுத்துறை கணினிமயமாக்கல் திட்டத்தில் முழுமை அடையப்பெற்றுள்ள மாநிலங்களில் தமிழகம் முதன்மையாக விளங்குகிறது.

மின்னணு ஆளுமையில் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில், மேலும் ஒரு மைல் கல்லாக பதிவுத்துறையில் மின்னணு முத்திரைத்தாள் திட்டத்தினை (e-Stamping Project) இன்று **(27.05.2010)** மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

வேகமாக வளர்ந்து வரும் மின்னணுமயமாக்கல் செயல்பாடுகளுக்கு ஈடுசெய் முகமாகவும், முத்திரைத் தீர்வை செலுத்தும் முறைக்கு மாற்று ஏற்பாடாகவும், இந்த மின்னணு முத்திரைத்தாள் திட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்படும் மின்னணு முத்திரைத்தாட்களை கிரையம், அடமானம் போன்ற அனைத்து வகைத் தன்மையுடைய ஆவணங்களையும் எழுதித் தடையின்றிப் பதிவு செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (M/s Stock Holding Corporation of India Limited) என்ற நிறுவனம் தமிழ்நாட்டில் மின்னணு பதிப்பு திட்டத்தினை அமுல்படுத்திட நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மின்னணு பதிப்பு திட்டத்தினை அமுல்படுத்தி நிர்வகித்திடும் அதிகாரம் தமிழ்நாடு பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இணையம் மூலம் நிர்வகிக்கப்படும் இந்த மின்னணு முத்திரைப் பதிப்பு திட்டம் காரணமாக; வசூலித்த முத்திரைத் தீர்வையினை அரசு கணக்கில் எளிதாகவும் விரைவாகவும் பாதுகாப்பாகவும் செலுத்திடலாம். இணையம் மூலம் மின்னணு முத்திரைச் சான்றுகள் அளிக்கப்படுகிறது. இணையம் மூலம் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்ட விவரத்தினைச் சரிபார்த்து ஆவணம் பதிவு செய்யப்படுகிறது. மின்னணு முத்திரைத்தாள் தனிப்பட்ட அடையாள எண். (UIN), இரு பரிமாண பட்டை குறியீடு (2D Barcode) மற்றும் தவறான முறையில் பயன்படுத்த இயலா வண்ணம் நுண் அச்சு (microprint) மற்றும் பூட்டுதல் (Locking System) முறையினைக் கொண்டு தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. போலி முத்திரைத்தாள் புழக்கத்தினை முற்றிலும் ஒழித்திட ஏதுவாக உள்ளது.

இந்த மின்னணு முத்திரைத்தாள் திட்டம் தென்சென்னை, தி.நகர், மத்திய சென்னை, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், வடசென்னை, இராயபுரம் பகுதிகளில் உள்ள 9 சார்பதிவாளர் அலுவலகங்களில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் முன்னோடித் திட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. படிப்படியாக இத்திட்டம் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

பதிவு பயனாளிகள் மின்னணு முத்திரை சான்றினை பெறுவதற்கு கீழ்க்கண்ட எளிய நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றது :

1) முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலக வளாகங்களில் அங்கீகரிக்கப்பட்ட SHCIL நிறுவன வசூல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
2) இந்த அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையங்களை பதிவுப் பொது மக்கள் அணுகி மின் முத்திரைத்தாள் பெறுவதற்கான ஒரு எளிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.
3) முத்திரைத் தீர்வையினை தொகையாகவோ / வரைவோலையாகவோ / பண மாற்றம் மூலமாகவோ (RTGS/ NEFT) மேற்படி மையத்தில் செலுத்திடலாம்.
4) பயனாளிகள் தாங்கள் அளித்த விவரங்களை மாதிரி சான்று ஒன்று பெற்று விவரங்களை சரிபார்த்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
5) பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த மின்னணு முத்திரைச் சான்றினை பெற்று ஆவணம் தயார் செய்து பதிவு அலுவலரிடம் பதிவுக்கு தாக்கல் செய்யலாம்.
6) சான்றிதழின் உண்மைத் தன்மை இணையம் மூலம் சரிபார்க்கப்பட்டு ஆவணப்பதிவினை நிறைவு செய்துகொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.
7) எந்தவொரு தொகைக்கும் ஒரே முத்திரைத்தாளினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தினைத் துவக்கிவைத்து தலைமைச் செயலகத்தில் இன்று (27/05/2010) 44 பயனாளிகளுக்கு மின் முத்திரைத்தாட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ் ராஜன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திரு முகமது நசீமுத்தின், பதிவுத்துறைத்தலைவர் திரு ரா. சிவகுமார், மற்றும் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஆர்.எச்.மேவாவாலா, இந்தியன் வங்கி பொது மேலாளர்கள் திரு.கே.நடராஜன், ஏ.டி.எம்.பிலிப் ஜோசப், கார்ப்பரேஷன் வங்கி பொது மேலாளர் பி.என்.ஷெனாய் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.